75 லட்சம் ரூபாய் செலவில் 3,000 புதிய பேருந்துகளை வாங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவு # அதிமுக அமைப்பு செயலாளர் பொறுப்பிலிருந்து முன்னாள் அ

இணையதள ரசிகர்களின் இந்திரபுரி

வணக்கம் : Gopalan | என் கணக்கு | கடவுச்சொல்லை மாற்ற | வெளியேற

விகடன் தேடல்

| ஆனந்த விகடன் | ஜூனியர் விகடன் | அவள் விகடன் | சுட்டி விகடன் | சக்தி விகடன் | நாணயம் விகடன் | மோட்டார் விகடன் | பசுமை விகடன் |

Free | செய்திகள் | சினிமா | யூத்ஃபுல் | யோககாலம் | டாக்டர் | லட்டு பாப்பா | மின் இதழ்கள் | பிரசுரங்கள் | இதழ் சந்தா | முந்தைய இதழ் |

Get more into Music
sunburn | Goa, Dec 27-29
youtube.com/sunburnfestival

அட்டை படம்

Like Tweet 0 (17) A+ A-


Previous Next

28-டிசம்பர்-2011

வாசல்
அரசியல்
ஸ்பெஷல் -1
ஆனந்த விகடன் பொக்கிஷம்
ஸ்பெஷல் -2
நையாண்டி
கதைகள்
சினிமா
தொடர்கள்
டாக்டர் விகடன்
என் விகடன் - சென்னை
என் விகடன் - கோவை
என் விகடன் - திருச்சி
என் விகடன் - மதுரை
என் விகடன் - புதுச்சேரி

# நாலு பேருக்கு நல்லதுன்னா...

வில்லிவாக்கம் வள்ளல்




''எங்கள் வில்லிவாக்கம் பாபாநகர் 6-வது தெருவில் சிவதாணு என்பவர் சனிக்கிழமைதோறும் பிச்சைக்காரர்கள், மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தோர் என அனைவருக்கும் கொஞ்சம் பணமும் ஒரு பிஸ்கட் பாக்கெட்டும் கொடுத்துவருகிறார்'' என்று, வில்லிவாக்கம் சாம்பசிவம் என்ற வாசகர் தொலைபேசியில் சொன்ன தகவல் இது. அந்தச் சேவை உள்ளத்தைச் சந்திக்க உடனே வில்லிவாக்கம் கிளம்பினோம்.


சிவதாணு

ரயில் நிலையத்தில் இறங்கி, 'பாபா நகருக்கு எப்படிங்க போறது?' என்று கேட்டால், 'அதோ போகுதே கூட்டம் அது கூட போங்க. பாபா நகர் வந்துடும்' என பதில் வருகிறது. அங்கே பார்த்தால் அரசு நிவாரண உதவி பெறுவதைப் போல, ஒருவர் பின் ஒருவராக மூட்டை முடிச்சுகளுடன் அணிவகுத்துச் சென்றது நீண்ட நெடிய வரிசை. ஆச்சர்யத்தோடு நானும் இணைந்துகொண்டேன்.

முன்னால் நின்று இருந்த மாற்றுத்திறனாளி ஒருவரிடம், 'ஒரு ஆளுக்கு எவ்வளவு பணம் தர்றாங்க?' என்று விசாரிக்கத் தொடங்கியதும் அலர்ட் ஆனார். ''ஆமா, நீ எங்கே இருந்து வர்ற?'' என்றார். விவரம் சொன்னதும், ''அழகாப் படம் புடிச்சி நீ பத்திரிகையில போட்டுட்டுப் போயிடுவே. அதைப் பாத் துட்டு கூட்டம் குவியும். மவராசன் குடுக்குறதுலயும் மண்ண அள்ளிப்போட பாக்கிறே?'' என்று கோபத்தின் உச்சிக்குப் போனவரைச் சமாதானப்படுத்திப் பேசவைத்தேன். ''என்பேரு நாகப்பன்.

ஆந்திரா மாநிலம் புத்தூர். வலது கை, கால் பக்கவாதத்தில விழுந்துடுச்சு. இந்த எசமான்தான் வாராவாரம் படியளக்குறாரு. ஒன்றரை வருஷமா வந்துட்டு இருக்கேன். நானும் என் புள்ளைங்களும் இவங்களுக்கு ஏழேழு ஜென்மத் துக்கும் கடமைப்பட்டிருக்கோம்'' என்றார். ''என் பேரு பாட்ஷா. ஊரு திருவள்ளூர். ஒரு விபத்தில் கால் துண்டாயிடுச்சு. இப்ப செயற்கைக்கால்தான். வாராவாரம் புள்ளை குட்டிகளை அழைச்சிட்டு வந்துடுவேன்'' என்கிறார் மற்றொருவர்.







காலை 7 மணிக்குச் சூடுபிடித்தது பண உதவி வைபவம். பணம் பெற வந்தவர்களில் சிலரே வாலன்டியராக மாறி, சிவதாணுவுக்கு உதவி செய்யத் தொடங்கினார்கள். ஆட்கள் வர வர வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் என தரம் பிரிக்கப்பட்டு மஞ்சள், பச்சை, ரோஸ், வெள்ளை நிற பேண்டுகள் கையில் அணிவிக்கப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கு ₹ 70, வயதானவர்கள், பிச்சைக்காரர்களுக்கு ₹  50, குழந்தைகளுக்கு ₹ 10. தவிர, அனைவருக்கும் ஒரு பிஸ்கட் பாக்கெட்டும் தரப்படுகிறது. பணம் பெற்றவர்களுக்கு உள்ளங்கையில் 'தொகை வாங்கப்பட்டது' சீல் வைக்கப்படுகிறது. வந்தவர்கள் அனைவருக்கும் பணம் கொடுத்து முடித்தபோது, காலை மணி 11.30. பணத்தைக் கட்டில் இருந்து பிய்த்துக் கொடுத்துக் களைத்துப்போய் அமர்ந்து இருந்த சிவதாணுவைச் சந்தித்தேன். முதலில் பேச மறுத்தவர், சில விஷயங்களை மட்டும் பகிர்ந்துகொண்டார்.




''ஸ்ரீசிவதாணு அறக்கட்டளை என்ற அமைப்பின் மூலம் செய்யப்படும் இந்தச் சேவை, ஏழைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இந்த டிரஸ்ட் ஆரம்பித்து ஒன்றரை வருடம் ஆகிறது. பணம் தருவது தவிர, தீபாவளிக்கு ஏழைகளுக்கு சேலை, வேட்டியும் தருகிறோம். கடந்த தீபாவளிக்கு மட்டும் ஏழு லட்சம் ரூபாய் செலவானது. செலவு முழுவதும் 'சிவதாணு அறக்கட்டளையைச் சார்ந் தது. வேறு எந்த அமைப்பு, நிறுவனம் மற்றும் தனிநபர் களிடம் இருந்தும் இதற்காக நன்கொடை பெறுவது இல்லை. வாராவாரம் 2,000 பேர் வரை வருகிறார்கள். இதை நீங்கள் எழுதினால் வரும் ஆட்களின் எண்ணிக்கை கூடும். என்ன செய்வது அவர்களுக்கும் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

உள்ளூர் மக்களைவிட குண்டூர், சித்தூர், புத்தூர், கடப்பா, நெல்லூர் என ஆந்திராவில் இருந்தும் தமிழ்நாட்டின் மற்ற  மாவட்டங்களில் இருந்தும்தான் அதிகமா வர்றாங்க. ஏன், எதுக்கு செய்றீங்கனு காரணம் கேட்காதீங்க. தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. எனக்கு மூன்று பையன்கள், ஒரு பொண்ணு. நல்ல படிப்பு, வெளிநாட்டு வேலைனு எல்லாரும் வசதியா இருக்காங்க. 'நானும் நல்லா இருக்கணும். மக்களும் நல்லா இருக்கணும்'கிற எண்ணம்தான் இந்த உதவிக்குக் காரணம். மத்தபடி எனக்கு விளம்பரம் பிடிக்காது. வந்ததுக்கு ரொம்ப நன்றி. நிறையப் பேசிட்டேன். போயிட்டு வாங்க'' என வாசல் வரை

வந்து வழி அனுப்புகிறார். இதைத் தவிர வழக்கறிஞரான சிவதாணு வாரந்தோறும் இலவச சட்ட ஆலோசனைகளும் வழங்குகிறாராம்.

நல்ல மனம் வாழ்க... நாடு போற்ற வாழ்க!




- **தி.முத்துராஜ்**

**Previous** **Next** [ Top ]

Open your Gmail account.
Everyone's waiting to hear from you.
Gmail by Google BETA

**உங்கள் கருத்து**

தமிழ் English Name: Gopalan Email Id: gopalan@ops.gopalan

(For type in tamil : அம்மா = ammaa, விகடன் = vikatan)

Post

(குறிப்பு: தங்கள் கருத்து பதிவுக்கு நன்றி. நெறியாளர் பார்வைக்கு பிறகே பதிப்பிக்கப்படும்)

**விகடன் இணையதள கருத்துப் பகுதியின் விதிகளும் - வேண்டுகோளும்**

அன்பு

Image Not Available

"ஏழைகளுக்கு சேலை, வேட்டியும் தருகிறோம்"--------> வறியார்க்கொன்று ஈவதே ஈகை என்ற குறல் வரிக்கு உயிர் கொடுத்துள்ளார் சிவதாணு. விளம்பரம் இல்லாமல், உள்நோக்கம் இல்லாமல் உதவும் இவரது செயல் போற்றுதலுக்குரியது. டாலரைக் காட்டி ஏமாற்றும் மோசடிக் கும்பலுக்குச் சாட்டியடி சிவதாணு.

Like |Report Abuse |19 Hours ago

Seetharaman

Image Not Available

How can we donate to this charity? Please provide details....

Like |Report Abuse |3 Days ago

THANUMOORTHY

Image Not Available

மனம் இருந்தும் முடியாமல் இருப்போர் பலபேர்.
செய்வதை விளம்பரப்படுத்தாமல் செய்யும் திரு. சிவதாணு அவர்களுக்கு வாழ்த்துக்கள்.Hats off! Sir!

Like |Report Abuse |4 Days ago

ragothaman

Image Not Available

எல்லோரு இதுபோல செய்ய என் வாழ்த்துக்கள்!

Like |Report Abuse |4 Days ago

Kuvalai Ezhil

Image Not Available

அடேயப்பா பெரிய மனுஷந்தான்

Like |Report Abuse |4 Days ago

ANBUCHELIAN

Image Not Available

அருமை. வாழ்த்துக்கள்.

Like |Report Abuse |4 Days ago

Vignesh

Image Not Available

நல்ல மனம். இந்திய ஏழ்மை பொருளாதாரம் பற்றி படிக்கும் நபர்களுக்கு தெரியும், வறுமையும், வளமும் ஒரு சேர ஆட்டி வைக்கும் மாநிலம் ஆந்திரா என்று. சமீபகாலங்களில் தமிழகத்தில் மிக ஏழ்மை நிலையை சேர்ந்தவர்கள் ஆந்திராவில்லிருந்து தமிழகத்துக்கு குடி பெயர்ந்தவர்கள் என்று. அங்கு நிலவும் ஆதித பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாக நிறைய விவசாயிகள் தற்கொலை மற்றும் இடம் பெயர்தல் நடக்கிறது. இதை தடுக்கு நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றாலும், ஆதித சமூக இடைவெளி எத்தகைய தாக்கத்தை ஏற்ப்படுத்தும் என்பது ஆந்திராவை பார்த்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

Like |Report Abuse |5 Days ago

Asokan G, Singapore

Image Not Available

வாழ்க சிவதாணு ஐயா, நலமுடன் பல்லாண்டு...

Like |Report Abuse |5 Days ago

GULAM KADER

Image Not Available

மீன் கொடுப்பதே விட மீன் பிடிக்க கத்துக்கொடு.

Like |Report Abuse |6 Days ago

G pandiyan

Image Not Available

நல்ல மனம் வாழ்க... நாடு போற்ற வாழ்க

Like |Report Abuse |6 Days ago

Ramanathan

Image Not Available

"..பிறர் நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்.., இவை அனைத்திலுமே இருப்பது தான் தெய்வம்
பாசமுள்ள பார்வயிலே கடவுள் வாழ்கிறார், அவர் கருணையுள்ள நெஞ்சினிலே கோவில் கொள்கிறார்"

Like |Report Abuse |6 Days ago

Sivakumar

Image Not Available

வாழ்க நல்லாரின் தொண்டு.

Like |Report Abuse |6 Days ago

sankar

HATS OFF SIR.
LET every politician follow his foot steps.

Like |Report Abuse |6 Days ago

ramakrishnan

நன்றீ.

1 Like |Report Abuse |6 Days ago

Siva

வாழ்க.

2 Like |Report Abuse |6 Days ago

Ravi-Austin

Hats off !!!

2 Like |Report Abuse |7 Days ago

Ravi-Austin

Hats off !!!

Like |Report Abuse |7 Days ago

1 Displaying 1 - 17 of 17

Top Keywords : அண்ணா ஹஜாரே கூடங்குளம் அணுமின் நிலையம் முல்லைப் பெரியாறு ஜெயலலிதா சொத்து குவிப்பு வழக்கு சில்லரை வர்த்தகம் பழங்குடியினப் பெண்கள் கூடங்குளம் ஸ்பெக்ட்ரம் லோக்பால்

Top Keywords : cauvery kudankulam nuclear power plant jayalalitha mullaperiyar dam issue wall street FDI in retail market rajiv gandhi murdered lokpal bill kanimozhi bail A.Raja

© 2010 vikatan.com All rights Reserved. Best view in 1024x768 px | Media Kit | Font Help | Terms & Conditions | FAQ | Contact Us | Site Map | Subscription P